**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044313

1. District மாவட்டம் : நாமக்கல்
   PS காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு, நாமக்கல்.
   Year ஆண்டு :
   FIR No. மு.த.அ. எண் : 5/AC/2021
   Date நாள் : 01.10.2021

2. (i) Act சட்டம்: The prevention of corruption Sections பிரிவுகள்: 7, 7-A
   (ii) Act சட்டம்: Act. 1988 as amended by the Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act. 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 30.09.2021
   Date to நாள் வரை : பகல் 13.00 மணிக்கு முன்பு
   Time Period நேர அளவு :
   Time from நேரம் முதல் :
   Time to நேரம் வரை. :

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021
   Time நேரம் : 12.00 மணிக்கு

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-III
   Time நேரம் : 01.10.2021 12.00 மணிக்கு

4. Type of Information : Written / Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 50 கி.மீ. மேற்கு
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், குமாரபாளையம், இருப்பு தனியனூர், பள்ளிபாளையம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர்.பெயர் A.S. ராஜ்குமார்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் A. சதாசிவம்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 04.07.1974
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக
   (f) Occupation : தொழில்
   (g) Address : முகவரி உதவியாளர், நாமக்கல் மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. P. சந்தியா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், குமாரபாளையம் மற்றும் 3 நபர்கள் (விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Form-91 நாள்: 01.10.2021-ன் மூலம் அனுப்பப்படுகிறது

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப் படுகிறது

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 1/10/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

01.10.2021 13.30 மணிக்கு

Name: பெயர் M. நல்லசிவமாறன்
Rank: நிலை ......................No. எண் .........

காவல் ஆய்வாளர்,
உணவுப் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 05/AC/2021, u/s. 7 and 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி.,**

எதிரிகளின் பட்டியல்

1. திருமதி.P.சத்யா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம்.

2. திரு.S.விஜயன் (வயது-31), த/பெ.சக்திவேல், கதவு எண்.29-A T.V.S. மேடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். (தனியார்)

3. திரு.பிரபு (எ) திரு.S.தாமரைக்கண்ணன் (வயது-40), த.பெ.சம்பத்குமார், கதவு எண்.273, ATC காலனி, வரப்பாளையம், தோக்கவாடி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியர்)

4. திரு.P.பூபாலன் (வயது-41), த/பெ.பெரியசாமி, கதவு எண்.2/13E மோடமங்கலம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

**நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.05/AC/2021, u/s. 7 and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

சமர்ப்பிக்கப்படுகிறது:

இன்று 01.10.2021-ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட வழங்கல் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் மற்றும் நாமக்கல் மாவட்ட சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.A.S.ராஜ்குமார், அவர்கள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி சமர்ப்பித்த புகார் அறிக்கையின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் A.S.ராஜ்குமார், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட வழங்கல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல் மற்றும் சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாமக்கல் மாவட்டம். பெறுதல் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல். **R.O.C.No.1/2021 (A2), நாள்:01.10.2021** அம்மையீர், பொருள்: ஆய்வுக்குழு - திடீர் தணிக்கை - 30.09.2021-ஆம் தேதி பகல் 13.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம், குமாரபாளையம், இருப்பு களியனூர், பள்ளிபாளையம், நாமக்கல் மாவட்டம் அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டது, குற்றவியல் தொடர்புள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுதல் - தொடர்பாக. பார்வை: நாமக்கல் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள், நாள்:30.09.2021. நான் நாமக்கல் மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர், நாமக்கல் அவர்களின் உத்தரவின்படி நாமக்கல் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம், களியனூரில் இயங்கிவரும் குமாரபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் மோட்டார்

வாகன ஆய்வாளர் மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், புதிய வாகனப்பதிவு, பழகுநர் உரிமம் அளித்தல், ஓட்டுநர் உரிமம் அளித்தல், வாகன உரிமையாளர் பெயர் மாற்றம், வாகனத்தின் பதிவு முகவரி மாற்றம், வாகன ஆண்டு புதுப்பித்தல் சான்று வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்தில் அலுவலகத்திலும், அருகிலுள்ள ஜெராக்ஸ் கடை அருகே வாகன சோதனை செய்யும் இடத்திலும் வைத்து 30.09.2021-ஆம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 30.09.2021-ஆம் தேதி பகல் 13.00 மணிக்கு பள்ளிபாளையம், களியனூரில் இயங்கிவரும் குமாரபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் நாமக்கல் மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான் நாமக்கல் மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் ஆய்வாளர், சேலம், தர்மபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களின் ஆய்வுக்குழு ஆய்வாளர் நிலை-1 மற்றும் காவலர் குழுவினருடன் சென்று திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தின் வெளியில் வடக்குப் பக்கம் சாலையோரம் இருந்த ஜெராக்ஸ் கடை அருகே வாகனம் சோதனை செய்யும் இடத்தில் கையில் பேக்குகளுடனும், சில ஆவணங்களுடனும் சந்தேகப்படும்படியாக நின்று கொண்டிருந்த சிலரையும் அலுவலகத்தின் உள்ளே அழைத்துக் கொண்டு உள்ளே வரப்பட்டது. அந்த சமயத்தில் அலுவலகத்தின் உள்ளே இருந்த ஒரு நபர் அலுவலகத்திற்கு தெற்கு பக்கம் பணம் செலுத்தும் கவுண்டருக்கு செல்லும் வழியில் ஓடி அந்த பக்கம் காம்பௌண்ட் சுவரை தாண்டி குதித்ததை பார்த்து காவலர்களை அனுப்பி அவரை அழைத்துவரப்பட்டும், அலுவலகத்தின் வெளிப்பகுதி, Smart Card புகைப்படம் எடுக்கும் அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, போக்குவரத்து பயிற்சி மற்றும் பழகுநர் உரிமம் வழங்கும் அறை, கண்காணிப்பாளர் மற்றும் அலுவலக பணியாளர் அறைகளில் உள்ள அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் யாரும் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் மோட்டார்

வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியும், அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள், தனி நபர்கள், பொதுமக்கள் உட்பட அனைவரும் திடீர் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர். திடீர் தணிக்கையானது 30.09.2021-ஆம் தேதி பகல் 13.00 மணி முதல் இரவு 20.00 மணி வரை நடைபெற்றது. திடீர் தணிக்கையின்போது திருமதி.S.மோகனகீதா, W/o.சக்திவேல், காந்திநகர், சடையம்பாளையம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் திருமதி.S.மாதேஸ்வரி, க/பெ.செல்வம், களியனூர், பள்ளிபாளையம், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம் ஆகிய தனிநபர்களை அரசு ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.P.சத்யா அவர்கள் அரசு விதிகளுக்கு புறம்பாக பணியமர்த்தி அவரது அலுவலக பணிகளை செய்ய அனுமதித்துள்ளது தெரியவருகிறது. மேலும் திடீர் தணிக்கையின்போது மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்திலும், மோட்டார் வாகன ஆய்வாளர் வாகன சோதனை செய்யும் இடத்திலும் இருந்த தனி நபர்கள், பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்கு தேவையான அன்றாட மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலக வேலைகளை புரோக்கர்களாக செயல்பட்டு செய்து வந்துள்ளனர். அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அவர்கள் வைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டும், அவர்களிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக சந்தேகத்திற்கிடமான வகையில் வைத்திருந்த கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது.

| வ. எண். | தனி நபரின் பெயர் முகவரி | கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ. |
|---|---|---|
| 1. | திரு.S.விஜயன் (வயது-31), த/பெ.சக்திவேல், கதவு எண்.29-A, T.V.S. மேடு, பள்ளிபாளையம், குமாரபாளையம் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம். | ரூ.5,500/- |
| 2. | திரு.பிரபு (எ) திரு.S.தாமரைக்கண்ணன் (வயது-40), த.பெ.சம்பத்குமார், கதவு எண்.273 ATC காலனி, வரப்பாளையம், தோக்கவாடி-அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். | ரூ.5,500/- |

| | | |
|---|---|---|
| 3. | திரு.P.பூபாலன் (வயது-41), த/பெ.பெரியசாமி, கதவு எண்.2/13E மோடமங்கலம்-அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம். | ரூ.13,100/- |

எனவே, குமாரபாளையம் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகத்தில் திடீர் தணிக்கை மேற்கொண்டபோது மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் விதிமுறைகளுக்கு மாறாக தனிநபர்களை அலுவலகத்திற்குள் பணி செய்ய அனுமதித்ததும், அலுவலகத்தில் புரோக்கர்களாக செயல்பட்டவர்கள் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மேற்படி தனிநபர்களிடமிருந்து சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அவர்கள் வைத்திருந்த கணக்கில் வராத பணம் மொத்தம் ரூ.24,100/-ம், ஆவணங்கள் மற்றும் திடீர் தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள், ஆகியவற்றை இத்துடன் மேல் நடவடிக்கைக்காக ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம்/-XXXX (A.S.ராஜ்குமார்), மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட வழங்கல் அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், நாமக்கல் மற்றும் சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

**Submitted:**

I had received a complaint from Tr.A.S.Rajkumar, Personal Assistant to District Supply Officer, District Supply Office, Collectorate, Namakkal District and Special District Inspection Cell Officer, Namakkal District and getting oral concurrence from the Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Namakkal Vigilance and Anti-Corruption Crime No.5/AC/2021 u/s 7 and 7-A of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 against the accused No.1 to accused No.4 noted in the margin on 01.10.2021 at 12.00 hrs. sd/-xxxx (M.Nallammal), Inspector of Police, V&AC, Namakkal.

The original FIR along with original complaint of Tr.A.S.Rajkumar, Personal Assistant to District Supply Officer, District Supply Office, Collectorate, Namakkal District and Special District Inspection Cell Officer, Namakkal District and the original Proceedings, Statements, Seized amount Rs.24,100/- and Seized documents is submitted to the Hon'ble Court of Special Judge/Chief Judicial Magistrate, Namakkal and a copy of F.I.R. is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(M. நல்லம்மாள்) 1/10/2021
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.